# கோவில்பட்டி நகராட்சி
# நிர்வாக அறிக்கை
# 2018–2019

## 1) <u>ஆட்சி அமைப்பும், எல்லைத் தோற்றமும்</u>

தமிழக அரசின் ஊர் வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் 11.02.1964ம் தேதிய எம்.எஸ்.எண். 361ம் உத்தரவின்படி 1.04.1964 முதல் மூன்றாம் நிலை நகராட்சியாக ஆக்கப்பட்டது. இந்நகராட்சி பின்னர் தமிழக அரசின் ஊர் வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறையின் 14.06.1971ம் நாளைய 1407ம் எண் அரசாணையின்படி 08.08.1971ம் நாள் முதல் இரண்டாம் நிலையாக உயர்த்தி ஆணையிட்டது. இந்நகரின் வளர்ச்சியினை கருத்தில் கொண்டு தமிழக அரசின் 08.05.1983 தேதிய எம்.எஸ்.எண். 651ம் அரசாணையில் 28.06.1983 முதல் இந்நகராட்சி முதல் நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டது. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண். 85ன்படி 22.05.1998ம் தேதி முதல் இந்நகராட்சியின் தரம் **தேர்வு நிலையாக** உயர்த்தப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசாணை எண்.237, நாள். 2.12.2008 முதல் இந்நகராட்சியின் தரம் **சிறப்பு நிலையாக** உயர்த்தப்பட்டுள்ளது. 2011ம் வருடத்திய மக்கள் தொகை கணக்கீட்டின்படி இந்நகரின் மக்கள் தொகை 95,057 ஆகும். இதில் ஆண்கள் 46,033 ஆகும். பெண்கள் 49,024 ஆகும். திருநங்கைகள் 2 ஆகும்.

## 2) <u>ஆட்சி எல்லை</u>:

இந்நகராட்சி கோவில்பட்டி கிராமம் ஒரு பகுதி மற்றும் இலுப்பையூரணி கிராமம் ஒரு பகுதியை சேர்த்து 6.58 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுடையதாகும். அறிக்கை ஆண்டில் இந்நகராட்சியின் எல்கையில் யாதொரு மாற்றமும் இல்லை. 1991 வருட மக்கட் தொகை அடிப்படையில் இந்நகரினை 36 தொகுதிகளாகப் பிரித்து 11.06.1996ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண். 135ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இப்புதிய வார்டு பிரிவினை 1966–ம் ஆண்டு நடைபெற்ற சாதாரண நகர்மன்ற தேர்தலில் இருந்து (12.10.1996) அமுலுக்கு வந்தது. இந்த பிரிவினைப்படி தற்போது 2006 சாதாரண தேர்தலில் பெண்களுக்காக 12 வார்டுகளும் (வார்டு எண்கள் 2,5,10,11,12,13,14,18,26,27,29 மற்றும் 35) தாழ்த்தப்பட்டவர்களுக்காக 3 வார்டுகளும் (வார்டு எண்கள் 5, 30 மற்றும் 36 ) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சென்னை மாநிலத் தேர்தல் ஆணையம் சட்டபூர்வ ஆணையை ஓ.எண்.98/2011/T.N.S.E.C/M.E. நாள்: 01.10.2011–ன்படி 2011–ம் வருடத்தில் உள்ளாட்சி தேர்தலை நடத்த உத்தரவிடப்பட்டது. அதற்கிணங்க இந்நகராட்சியில் 19.10.2011–ம் நாளன்று

நகர்மன்றத் தேர்தல் நடைபெற்றது. தேர்தல் முடிவுற்ற பின் அறிக்கை ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய நகர்மன்றம் 25.10.2011 முதல் செயல்படத் துவங்கி 24.10.2016உடன் முடிவடைந்தது. 01.04.2018 முதல் 31.03.2019 வரை நகராட்சி ஆணையாளர் அவர்கள் தனி அலுவலராக செயல்பட்டு வருகிறார்.

## ஆணையாளர்:

அறிக்கை ஆண்டில் திரு.க.அச்சையா, 01.04.2018 முதல் 31.03.2019வரை ஆணையாளராகவும், தனிஅலுவலராகவும் பணிபுரிந்துள்ளார். பொது சுகாதாரம் சிறந்த முறையில் செயலாக்கப்பட்டு வருகிறது. மேட்டுப் பகுதிகளுக்கும் குடிநீர் பகிர்மான குழாய்கள் பதிக்கப்படாத இடங்களுக்கும் நகராட்சியிலிருந்து லாரி டாங்கர் மூலம் போதிய அளவு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பொது மக்களின் தேவைகள் அறியப்பட்டு அப்போதைக்கப்போது உடனுக்குடன் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

## மேலாளர்:

அறிக்கை ஆண்டில் 01.04.2018 முதல் 29.05.2018 வரை திருமதி.ப.மாரியம்மாள் கணக்கர் மற்றும் மேலாளர் கூடுதல் பொறுப்பாகவும், 30.05.2018 முதல் 31.03.2019வரை திரு.எம்.முத்துச்செல்வம், மேலாளராகவும் இந்நகராட்சியில் பணியாற்றி வந்தார்கள்.

## பொறியாளர் :

அறிக்கை ஆண்டில் 01.04.2018 முதல் 12.11.2018 வரை திரு.ப.குருசாமி, பொறியாளராகவும், 13.11.2018 முதல் 16.11.2018 வரை திருமதி.ந.அன்னம், உதவிபொறியாளர் மற்றும் பொறியாளர் கூடுதல் பொறுப்பாகவும், 17.11.2018 முதல் 31.03.2019 வரை திரு.எஸ்.கோவிந்தராஜன், நகராட்சி பொறியாளராகவும் இந்நகராட்சியில் பணியாற்றி வந்தார்கள்.

## நகரமைப்பு அலுவலர்:

அறிக்கை ஆண்டில் 01.04.2018 முதல் 31.03.2019 வரை திரு.எம்.காஜாமுகைதீன், நகர்அமைப்பு அலுவலராக பணியாற்றி வந்தார்.

## துப்புரவு அலுவலர்:

அறிக்கை ஆண்டில் 01.04.2018 முதல் 31.01.2019 வரை திரு.எஸ்.ஸ்டான்லிகுமார், துப்புரவு அலுவலராகவும், 01.02.2019 முதல் 31.03.2019 வரை திரு.ஆ.இளங்கோ, துப்புரவு அலுவலராகவும் இந்நகராட்சியில் பணியாற்றி வந்தார்கள்.

## வருவாய் அலுவலர்:

அறிக்கை ஆண்டில் 01.04.2018 முதல் 31.03.2019 வரை திரு.பி.ராஜேஸ்வரன், வருவாய் அலுவலராகவும் பணியாற்றி வந்தார்கள்.

## 4) கூட்டங்கள்:

அறிக்கை ஆண்டில் நகர்மன்றத்தின் மொத்தம் எண்ணிக்கை கூட்டங்கள் 15 நடைபெற்று உள்ளது. அவற்றுள் சாதாரண கூட்டங்கள் 12 அவசர கூட்டங்கள் 3 நடைபெற்றுள்ளது.

24.10.2016ல் நகர்மன்றஉறுப்பினர்களின் பதவிகாலம் முடிவடைந்தது. 25.10.2016–ம் தேதியிலிருந்து நகராட்சி ஆணையாளர் அவர்கள் தனி அலுவலராக பதவியேற்றார். மேலும் ஆணையாளர்/தனிஅலுவலர் பதவி காலத்தில் மொத்த எண்ணிக்கை கூட்டங்கள் – 15 அவற்றுள் சாதாரண கூட்டங்கள் –12, அவசர கூட்டங்கள்–2 ஆகும்.

2018–2019 ஆம் ஆண்டு இறுதியில் முடிவு செய்யப்படாமல் பொருட்கள் ஏதும் நிலுவையில் இல்லை. அறிக்கை ஆண்டில் பொருட்கள் பரிசீலனைக்கு வந்து அனைத்து பொருட்களுமே முடிக்கப்பட்டன.

## 5) குழுக்கள்: (~24.10.2016 வரை)

1) நியமனக்குழு திரு. ந. முத்துராஜ்– 7–வது வார்டு உறுப்பினர்
2) ஒப்பந்தக்குழு திரு. பரமசிவன் – 15–வது வார்டு உறுப்பினர்

## 3) வரிமேல் முறையீட்டுக்குழு (24.10.2016வரை)

1. திரு. கொ. குருவுத்தாய் .. 10–வது வார்டு உறுப்பினர்
2. திரு. எம். அருணாசலசாமி .. 32–வது வார்டு உறுப்பினர்
3. திரு. ஆர். கமலா .. 11–வது வார்டு உறுப்பினர்
4. திரு. கே. பத்மாவதி .. 14–வது வார்டு உறுப்பினர்

அறிக்கை ஆண்டில் கீழ்க்கண்ட குழுக்கள் கூடிய கூட்டங்களின் எண்ணிக்கை வரிசை எண்ணிற்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ளது.

| வ.எண் | குழுக்களின் பெயர் | கூட்டங்களின் எண்ணிக்கை | முடிவு செய்யப்பட்ட பொருட்கள் |
|---|---|---|---|
| 1 | நியமனக்குழு | – | – |
| 2 | ஒப்பந்தக்குழு | | |
| 3 | வரிமேல்முறையீட்டுக்குழு | | |
| 4 | உள்ளூர் திட்டக்குழு | | |

## 6) மேலாண்மை:—

இந்நகராட்சியின் பொது நிர்வாக பிரிவு வேலைகளுக்கு அறிக்கை ஆண்டான 01.04.2018 முதல் 31.03.2019வரை மேலாளர் மற்றும் கணக்கர் பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டு பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். ஏழு இளநிலை உதவியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தின்கீழ் ஒரு உதவியாளர் நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகிறார். வசூல் பணியை கவனிக்க ஒரு வருவாய் அலுவலர், இரு வருவாய் ஆய்வாளர்கள், 8 வருவாய் உதவியாளர்கள் ஆகியோர் பணி அமர்த்தப்பட்டுள்ளார்கள். பணியாளர் வேலைத் திறமைகள் சரிவர கண்காணிக்கப்பட்டு வருகிறது. பணியாளர்களை தண்டிப்பதில் இடர்பாடுகள் ஏதுமில்லை.

## இடவசதி:

நகராட்சி அலுவலகம் முந்திய அலுவலக கட்டிடத்திலேயே தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அதில் போதிய வெளிச்சமும் காற்றோட்டமும் உள்ளது. கட்டிடம் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

## வழக்குகளும் சட்ட செலவுகளும்:

கோவில்பட்டி மற்றும் தூத்துக்குடியில் உள்ள மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் சார்பு நீதிமன்றங்களில் நகராட்சி சார்பாக வாதிடுவதற்கு திரு.பாப்புராஜா, நகராட்சி வழக்கறிஞராகவும், சென்னை உயர்நீதிமன்றம் மதுரைகிளை, சென்னை உயர்நீதிமன்றம் சென்னையில் நகராட்சி சார்பாக வாதிடுவதற்கு திரு.பி.ஸ்ரீனிவாஸ் நியமிக்கப்பட்டுள்ளார். அறிக்கை ஆண்டில் நகர்மன்ற வழக்குகளுக்கு மேற்படி வழக்கறிஞர்கள் தொடர்ந்து ஆஜராகி வந்தார்கள். வழக்குகளை நகராட்சிக்காக நல்லமுறையில் நடத்தி வருகிறார்கள்.

## 7) சிப்பந்திகள்

இந்நகராட்சியில் 2வது நிலை பொறியாளர் பணியிடம் அனுமதிக்கப்பட்டுள்ளது. பொறியாளர் பொறியியல் மற்றும் குடிநீர் விநியோக சம்பந்தப்பட்ட எல்லா வேலைகளையும் மேற்பார்வை செய்து வருகிறார்கள்.

**8)** கட்டிடங்கள் கட்டும் வேலை, சாலை வேலைகள், வாறுகால்கள், கட்டுமான வேலை, குடிநீர் தேக்க நிலையங்கள், குடிநீர் விநியோக இதர வேலைகள், தனிப்பட்ட வீடுகளுக்கு குடிநீர் விநியோக இணைப்புகள் வழங்குவது போன்ற வேலைகளை ஒரு உதவிப் பொறியாளரும் ஒரு இளநிலைப் பொறியாளரும் அவர்களுக்கு உதவியாக போதுமான அளவு சிப்பந்திகளைக் கொண்டும் வேலைகள் செவ்வனே கண்காணிக்கப்பட்டு வந்தன. இப்பிரிவில் மொத்த சிப்பந்திகள் செலவு லட்சம் சாலைகள் பராமரித்தல் வேலைகளுக்கு உதவியாக மதிப்பீடுகள் அனுமதிக்கப்பட்டு மஸ்த்தூர்களின் மூலம் சாலைகள் செப்பனிடும் வேலைகள் நடைபெற்று வருகிறது.

## 9) சாலைகள், பாலங்கள், பரிசல்கள் மற்றும் கட்டிடங்கள்:

### 1. சாலைகள்:

அறிக்கை ஆண்டின் இறுதியில் நகராட்சி எல்லைக்குள் உள்ள மொத்த சாலைகள்.
79.760கி.மீ.

## 2. நகராட்சி சாலைகள்:

இந்நகர எல்கைக்குள் மதுரை – கன்னியாகுமாரி சாலை தேசிய நெடுஞ்சாலை துறையினராலும் மற்றும் கோவில்பட்டி, எட்டயபுரம் சாலை, கோவில்பட்டி – இளையரசனேந்தல் சாலை, கோவிலபட்டி – பசுவந்தனை ரோடு மற்றும் கோவில்பட்டி – கடலையூர் சாலை ஆகியவை மாநில நெடுஞ்சாலைத் துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

நகராட்சியின் நேரடிப் பார்வையிலேயே பராமரிப்பு வேலைகள் செய்யப்பட்டு வந்தன. இந்நகராட்சிக்கு சொந்தமானஎன கல்குவாரி ஏதும் கிடையாது. இந்நகரின் மேற்கே 20 கீ.மீ தொலைவில் உள்ள மைப்பாறை கல்குவாரி, குருவிகுளம் பஞ்சாயத்து யூனியன் எல்கையில் உள்ளது. சரள் எட்டயபுரம் சாலை அருகிலிருந்து எடுக்கப்பட்டு வருகிறது. சாலைக்குத் தேவையான ஜல்லி கற்களும், சரளும் ஒப்பந்தத்தின் பேரிலேயே பெறப்பட்டு வருகிறது. அரசினரின் 03.05.1952 தேதிய 10997 எண் குறிப்பாணையில் குறிப்பிட்டதற்கிணங்க விபரங்கள் கீழ்க்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளன.

| வ.எண். | விபரம் | 01.04.2018–ல் (இருந்தபடி கீ.மீ) | 31.03.2019–ல் (இருந்தபடி கீ.மீ) |
|---|---|---|---|
| 1 | நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வந்த சாலைகள் | 79.760 | 79.760 |
| 2 | 1வது கலத்தில் குறிப்பிட்டதிற்கு இனவாரியாக (அதாவது சிமிண்ட் சாலை, ஜல்லிக்கல் சாலை, சரள்சாலை மற்றும் தார் சாலை) ஆகியவற்றின் விபரங்கள் | | |
| | அ) சிமெண்ட் சாலைகள் | 18.876 | 16.876 |
| | ஆ) தார்சாலைகள் | 59.370 | 58.990 |
| | இ) ஜல்லிக்கல் சாலைகள் | 0.877 | 0.877 |
| | ஈ) கல்தளம் | 1.070 | 1.247 |
| | உ) சரள் சாலைகள் | 1.567 | 1.770 |
| | **மொத்தம்** | **79.760** | **79.760** |

இந்நகராட்சி எல்கைக்குள் உள்ள எல்லா மண்சாலைகளையும் ஜல்லிகள் சாலைகளாகவும், தார் சாலைகளாகவும், சிமெண்ட் தள சாலைகளாகவும் மாற்றி அமைக்கும் திட்டம் அனுமதிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி எல்லைக்குள் 4.426 கீ.மீ. நீளமுள்ள சாலைகள் நெடுஞ்சாலைத் துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. நகராட்சியின் எல்லைக்குள் நெடுஞ்சாலைத் துறையினரால் பராமரிப்பிலுள்ள சாலைகள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டியவைகளாக உள்ளன.

## 10) விளக்கு வசதிகள்:

இந்நகராட்சிக்கு தேவையான மின் வசதியை தமிழ்நாடு மின்வாரிய கழகத்திடமிருந்து பெற்று வருகிறது. அறிக்கை ஆண்டில் புதிதாக குழல் விளக்குகள் ஏதும் அமைக்கப்படவில்லை. குழல் மின் விளக்குகள், பாதரச மின் விளக்குகள், வெகுதூரம் வெளிச்சம் பாய்ச்சும் மின் விளக்குகள், சோடியம் ஆவி மின் விளக்குகள் மற்றும் உயர் மின் கோபுர விளக்குகள் கீழ்க்கண்டவாறு பராமரிக்கப்பட்டு வருகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1) | 4 அடி மின் குழல் விளக்குகள் | – | 3104 |
| 2) | 4x24w T5 CFC விளக்குகள் | – | 324 |
| 3) | உயர்மின் கோபுர விளக்குகள் | – | 9 |
| 4) | 70W சோடியம் ஆவி மின்விளக்குகள் | – | 23 |
| 5) | இதர விளக்குகள் (Solar) | – | 30 |
| | மொத்தம் | – | 3490 |

தெரு விளக்குகள் அனைத்தும் நகராட்சியின் பராமரிப்பில் உள்ளன. மேற்கண்ட தெரு விளக்குகளை பராமரிக்க இரண்டு வயர்மென்கள் மற்றும் இரண்டு ஹெல்ப்பர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளார்கள். தெரு விளக்குகளுக்கு பயன்படுத்தப்படும் மின் கட்டணம் ஒழுங்காக மின் வாரியத்திற்கு செலுத்தப்பட்டு வருகிறது.

தேவையான மின்சாதன உபகரணங்கள் நகராட்சியால் வாங்கப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

## 11) கல்வி:

நகராட்சியின் பள்ளிகள் அனைத்தும் 01.04.1990 முதல் உதவி கல்வி அலுவலரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பள்ளி ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் அல்லது ஊழியர்கள் சம்மந்தமாக எவ்வித செலவினம் ஏதும் நகராட்சியால் மேற்கொள்ளவில்லை கட்டிட பராமரிப்பு மட்டும் செய்யப்பட்டு வருகிறது.

## புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்:

15.09.1982 முதல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சத்துணவு திட்டம் ஆணையாளர் அவர்களின் நேரடி நிர்வாகத்திலேயே இயங்கி வருகிறது. இந்நகராட்சியில் 5 பள்ளிகளும், அந்தந்த பள்ளியிலேயே சத்துணவு திட்ட உணவு தயார் செய்து வழங்கப்பட்டு வருகிறது. எல்லா பள்ளிகளிலும் சேர்த்து மொத்தம் தினசரி 634 பிள்ளைகளுக்கு சத்துணவு வழங்கப்பட்டு வந்தது. சத்துணவு விநியோகிக்கப்படும் திட்டத்தின் கீழ் குழந்தைகளுக்கு நாள் ஒன்றுக்கு 0.70 பைசா வீதம் செலவு அனுமதிக்கப்பட்டுள்ளது.

## 12) ஆரம்ப கல்வி நிலை:

இந்நகராட்சியில் கல்வி வரியானது 1920ம் வருடத்திய தமிழ்நாடு ஆரம்ப கல்வி சட்டத்தின்படி சொத்துக்களின் ஆண்டு மதிப்பில் ஆண்டு ஒன்றுக்கு 7.6 சதவீதம் என்ற உச்ச வரம்பில் கல்வி நிதி வரி விதிக்கப்பட்டு வருகிறது. கல்விவரி மூலம் கிடைத்த வரவு ரூ. 125.99/– ஆகும்.

## 13) உயர்நிலைப் பள்ளிகள்:

இந்நகராட்சி காந்திநகர் பள்ளி எதுவும் பராமரிக்கப்படவில்லை. ஆனால், தனியார் துறையினரால் ஆண் பிள்ளைகளுக்கு மூன்றும், பெண் பிள்ளைகளுக்கு இரண்டுமாக 5 உயர்நிலைப் பள்ளிகள் தனித்தனியாக இயங்கி வருகிறது. அது போல் அரசினர் மேல்நிலைப் பள்ளிகள் இரண்டு, ஆண்களுக்கு ஒன்றும், பெண்களுக்கு ஒன்றுமாக இயங்கி வருகிறது.

### தனியாரால் நடத்தப்பட்டு வருபவை:

1. லட்சுமி ஆலை மேல்நிலைப் பள்ளி
2. நாடார் மேல்நிலைப் பள்ளி
3. ஆயிர வைசிய மேல்நிலைப் பள்ளி
4. கம்மாவார் பெண்கள் மேல்நிலைப் பள்ளி
5. எவரெஸ்ட் மாரியப்ப நாடார் பெண்கள் மேல்நிலைப் பள்ளி

### தமிழக அரசு துறையினரால் நடத்தப்பட்டு வருபவை :–

6. அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி
7. அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி

மேற்படி ஏழு மேல்நிலைப் பள்ளிகளிலும் புதிய பாட திட்டத்தின்படி 12வது வகுப்பு வரைக்கும் கல்வி போதிக்கப்படுகிறது. இந்நகராட்சியில் இம்மாதிரி பள்ளிகள் பராமரிக்கப்படவில்லை. மேற்கண்ட கல்வி நிலையங்களுக்குள் சுமூகமான உறவு முறை இருந்து வருகிறது.

## 14. பொது நூல் நிலையங்களும், படிப்பகங்களும் :

இந்நகராட்சி எல்கைக்குள் தமிழக அரசு நூலக ஆணைக் குழுவினரால் ஒரு நூல்நிலையம் நடத்தப்பட்டு வருகிறது. இந்நகராட்சியால் 9 இடங்களில் படிப்பகங்கள் நடத்தப்பட்டு வருகிறது. இந்நூல் நிலையம் மற்றும் படிப்பகங்கள் மூலம் இந்நகர்வாழ் மக்கள் பெரிதும் பயனடைந்து வருகிறார்கள். இந்நகராட்சியில் அறிக்கை ஆண்டில் படிப்பகங்களுக்கு செலவிடப்பட்ட தொகை ரூ. 15,00,000/– ஆகும்.

## பொது நலம்:

### 15) பொது மருத்துவம்

இந்நகராட்சியில் நகர்நல மையம் ஒன்று ஊரணித்தெருவில் இயங்கி வருகிறது. ஒரு பெண் மருத்துவ அலுவலர் மற்றும் ஆய்வக மருத்துவ பணியாளர்கள்–2 பணிபுரிந்து வருகிறார்கள். இந்நகரில் அரசினரால் ஒரு மருத்துவமனை நடத்தப்பட்டு வருகிறது. மேலும் தொழிலாளர் காப்பீட்டு கழகத்தினரால் மருந்தகம் ஒன்று செயல்பட்டு வருகிறது. தொற்று நோய்களுக்கான பகுதி ஒன்று அரசினர் மருத்துவமனை வளாகத்தில் இயங்கி வருகிறது. அரசு மருத்துவமனையின் சித்த வைத்திய முறைப்பிரிவும் இயங்கி வருகிறது.

இந்த மருத்துவமனை மற்றும் மருந்தகம் நீங்கலாக 38 தனியார் மருத்துவமனைகள் தேர்ச்சி பெற்ற மருத்துவர்களால் நடத்தப்பட்டு வருகிறது. அரசினர் மருத்துவ மனையில் ஆண்களுக்காக ஆண் மருத்துவர்களும், பெண்களுக்காக பெண் மருத்துவர்களும் அமர்த்தப்பட்டு செயல்படுகிறார்கள். இந்நகராட்சியால் மருத்துவ செவிலித்தாய்மார்கள் ஆகியோர் பயிற்சிக்கு அனுப்பப்படவில்லை. இது சம்பந்தமாக செலவு இல்லை.

## 16) அமைப்பு சிப்பந்திகள்:

இந்நகராட்சியில் மருத்துவ அதிகாரி பதவி இல்லை. எனவே, மேற்படி பணிக்காக அரசினருக்கு செலுத்த வேண்டிய உதவித் தொகை எதுவும் இல்லை. இங்கு துப்புரவு அலுவலர் மேற்படி பணிகளை செய்து வருகிறார்.

**<u>பொது சுகாதார பிரிவில் பணியாற்றிய சிப்பந்திகள் விபரம்</u>**

| | | |
|---|---|---|
| 1. துப்புரவு அலுவலர் | – | 1 |
| 2. துப்புரவு ஆய்வாளர்கள் | – | 6 |
| 3. மகப்பேறு உதவியாளர்கள் | – | 4 |
| 4. ஆயாக்கள். | – | 4 |
| 5.துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் | – | 12 |
| 6. லாரி ஓட்டுனர்கள் | – | 6 |
| 7. லாரி துலக்குநர் | – | – |
| 8. களப்பணி உதவியாளர் | – | 0 |
| 9. கொசு ஒழிப்புத் திட்ட தொழிலாளர்கள் | – | 100 (தற்காலிக டெங்கு பணிக்காக) |
| 10. துப்புரவு தொழிலாளர்கள் | – | 180 |

இந்நகராட்சி சுகாதார நல்வழி முறைகளைப் பற்றி பிரச்சார வேலைகள் சுகாதார இலாகாவில் பணியாற்றும் துப்புரவு ஆய்வாளர்கள் மற்றும் மகப்பேறு உதவியாளர்கள் ஆகியோர் செய்து வருகின்றனர். டெங்கு காலரா, மலேரியா, குத்திருமல்,

சத்துள்ள உணவு சுத்தமாக இருத்தல், மருத்துவ சிசு பரிபாலன வேலைகள் ஆகியவை பற்றி பிரச்சாரம் செய்து வருகிறார்கள். முத்தடுப்பு நோய் தடுப்பு மருந்துகளை அதன் வீரியம் குறையாமலிருப்பதற்காக குளிர்சாதன பெட்டிகள் இரண்டு எண்ணங்கள் தமிழக அரசு பொது சுகாதார துறை, இயக்குநர் அவர்களிடமிருந்து இலவசமாக இந்நகராட்சி பகுதியில் அமைந்து பொதுசுகாதார துறையின் கீழ் இயங்கும் நகர்நல மையம் 1ல் செயல்பட்டு வருகிறது. மகப்பேறு, குடும்பக் கட்டுப்பாடு, பிரச்சாரமும், செய்து வருகிறார்கள். அவைகளின் போதுமான அளவு தடுப்பு ஊசி மருந்துகள் பாதுகாப்பாக நவீன நிலையில் வைக்கப்பட்டு வருகிறது.

## 17) பிறப்பு விகிதமும் மகப்பேறு உதவியும்:

2011–ம் ஆண்டில் மக்கள் தொகை 95057 ஆகும். அறிக்கை ஆண்டில் பதிவு செய்யப்படாத பிறப்புகள் இல்லை. பதிவு செய்யப்படாத பிறப்புகள் தமிழ்நாடு அரசின் 2000ம் வருடத்திய பிறப்பு இறப்பு பதிவுச் சட்டம் மற்றும் விதிகளின்படி தாமதக் கட்டணம் இந்நகராட்சியில் வசூல் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டு வருகிறது. பிறப்பு இறப்பு பதிவு பணிகளை துப்புரவு ஆய்வாளர்கள் கவனித்து வருகிறார்கள். பொதுமக்களின் சௌகரியத்தை முன்னிட்டு நகரை 6 பிரிவுகளாக பிரித்து பிறப்பு இறப்பு பதிவு செய்யும் பணியை 6 துப்புரவு ஆய்வாளர்கள் செய்து வருகிறார்கள்.

இந்நகராட்சியில் 4 மகப்பேறு உதவியாளர்கள் மற்றும் 4 மகப்பேறு ஆயாக்கள் தொடர்ந்து செயலாற்றி வருகிறார்கள். பிறப்பு இறப்பு பதிவைப் பற்றி பிரச்சார வேலைகள் துப்புரவு ஆய்வாளர்கள் மூலமாக செயல்பட்டு வருகிறது. நான்கு மகப்பேறு நிலையங்களை மேன்மைப்படுத்தி இரண்டு நகர்நல மையங்கள் இரு மருத்துவ அலுவலர்கள் நியமனம் செய்து செயல்பட்டு வருகிறது.

## <u>அ) இறப்பு விகிதம்:</u>

அறிக்கை ஆண்டில் பதிவான இறப்பு 721 சென்ற ஆண்டு 737ஆகும். பதிவு செய்யப்படாத இறப்பு ஏதும் கண்டுபிடிக்கப்படவில்லை. உரிய காலத்தில் பதிவு செய்யப்படாத இறப்புகளுக்கு சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து 2000ம் வருடத்திய தமிழ்நாடு பிறப்பு இறப்பு பதிவு செய்தல் சட்டத்தின்படி ஏற்பட்ட காலதாமத கட்டணம் வசூலிக்கப்பட்டு மேற்படி சட்டம் மற்றும் விதிகளின்படி இறப்புகள் பதிவு செய்யப்பட்டன.

## ஆ) வாந்திபேதி:

அறிக்கை ஆண்டில் இந்நகராட்சியில் காலரா (வாந்திபேதி) ஏற்படவில்லை. MW J¥òuÎ gâahs®fS« FoÚ® tH§F« filÁ eŠèæš Fnshçndõ‹ MŒÎ brŒÍ« gâfis brŒJ tU»‹wd®. Ïj‹ _y« FoÚ® _y« guÎ« nehŒfŸ f£L¥gL¤j¥g£LŸsJ. காலரா தடுப்பு மருந்துகள் கையிருப்பில் தயார் நிலையில் உபயோகத்திற்கென வைக்கப்பட்டுள்ளது. அறிக்கை ஆண்டில்

இந்நோயினால் இறப்பு இல்லை. துப்புரவு அலுவலர் அவர்களால் நகரில் பல்வேறு இடங்களில் பலமுறை சென்று காலரா நோய் பீடிக்கப்பட்டிருக்காலாமா என்று சந்தேகிக்கப்பட்டவர்களை பார்த்து அவர்கள் வீடுகள் மற்றும் சுற்றுப்புறங்களில் தடுப்பு நடவடிக்கைகள் கையாளப்பட்டதை பார்வையிட்டார்கள்.

## இ) பிளேக்நோய்:

இந்நகரில் பிளேக் நோயினால் பாதிக்கப்பட்டவர் அறிக்கை ஆண்டில் எவரும் இல்லை.

## உ) கொசு ஒழிப்புத் திட்டமும், மலேரியா வியாதியும்:

இந்நகர் மலேரியா வியாதி ஏற்படும் வாய்ப்பு உள்ள நகர் அல்லாது இருந்தாலும், கொசுக்கள் ஒழிக்கும் திட்டம் செயல்பட்டு வருகிறது. இந்நகரில் 6 பாகங்களில் உள்ள கழிவு நீர் வாய்க்கால்களிலும், சிறு வாறுகால்கள் உள்ள இடங்களில், அப்போதைக்கப்போது கிருமி நாசினி மருந்துகள் அடிக்கப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. தனியாருக்கு சொந்தமான இடங்களிலுள்ள குப்பைகளை அப்புறப்படுத்திட சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. இந்நகர் தென்பாகம் உயர்ந்தும் வடபாகம் தாழ்ந்தும் உள்ளதால், சிறு கழிவு நீர் வாய்க்கால்கள் சிறு வடிகால்கள் அவைகளில் கழிவு நீர் தேங்கி நிற்க மார்க்கமில்லாது வழிந்து விடுகிறது எனவே, இந்நகரில் கொசு தொல்லை மிகவும் குறைந்துள்ளது.

### ஊ) டெங்கு ஒழிப்பு பணிகள்:

இந்நகர் 1972–ல் தொடங்கி வைக்கப்பட்ட குடிநீர் திட்டப் பணிகளை கொண்டே குடிநீர் வழங்கப்பட்டு வரப்படுகிறது. எனவே நகர மக்களிடம் குடிநீரை சேமிக்கும் பழக்கம் அதிகமாக இருப்பதால் டெங்கு கொசுக்களான ஏடிஸ் வகை கொசுக்கள் உற்பத்தியாக அதிக வாய்ப்புள்ள நகரமாக உள்ளது. இருப்பினும் 100 தற்காலிக களப்பணியாளர்களை சுயஉதவிக் குழுக்கள் மூலம் நியமித்து கொசுப்புழு உருவாக வாய்ப்புள்ள தேவையற்ற பொருட்களை அப்புறப்படுத்துதல், கிருமிநாசினி தெளித்தல், அபேட் மருந்து ஊற்றுதல் உள்ளிட்ட பணிகளை செவ்வனே செய்து டெங்குக் காய்ச்சல் கட்டுப்படுத்தப்பட்டு வரப்படுகிறது. டெங்கு காய்ச்சலினால் எந்த ஒரு இறப்பும் இல்லை.

### எ) காசநோய்:

அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் காசநோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சைப் பிரிவு இயங்கி வருகிறது. இதனால் நகரில் காசநோயின் இறப்போர் எண்ணிக்கை இல்லை.

## ஏ) தொழுநோய்:

இந்நகராட்சி எல்லைக்குள் தொழு நோய் மருத்துவ இல்லம் ஒன்று அரசினர் மருத்துவ மனையுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது. இந்நோய் தடுப்பதற்கும், பாதுகாத்து குணப்படுத்துவதற்கும் தனிப்பிரிவு ஒன்று அரசு மருத்துவ மனையில் இயங்கி வருகிறது.

## 18) துப்புரவு:

இந்நகராட்சி துப்புரவு அலுவலர் அவர்கள் தலைமையில் 6 துப்புரவு ஆய்வாளர்கள் 10 துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் ஆகியோர்கள் நேரடி மேற்பார்வையில் 193 துப்புரவு தொழிலாளர்கள் துப்புரவு பணியை செய்து வருகிறார்கள். நகரிலுள்ள எல்லா பொது நல சிறுநீர் கழிப்பிடங்களுக்கும் சிறந்த முறையில் சீர்திருத்தம் செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. அறிக்கை ஆண்டில் ஆரம்பத்திலிருந்து 30 கழிப்பிடங்களும் மற்றும் 8 சிறுநீர் கழிப்பிடங்களும் 4 நவீன கட்டண கழிப்பிடங்களும் மற்றும் 1 கட்டண குளியலறையும் இருந்து வருகிறது. மேலும், நவீன முறையில் ஆண், பெண் மற்றும் குழந்தைகக்கான சுகாதார வளாகம் 7 எண்ணம் வாம்பே திட்டத்தின் கீழ் 9 கட்டி முடிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. நகரில் அனைத்து துப்புரவு பணியாளர்களாலும், தெருக்களிலுள்ள குப்பைகளையும் சுத்தம் செய்து சேகரிக்கப்பட்டு பின்னர் லாரி மூலம் கலவை உரகிடங்கிற்கு கொண்டு செல்லப்பட்டு கலவை உரம் தயாரிக்கப்பட்டு வருகிறது. தினந்தோறும் சராசரி 35 மெட்ரிக் டன் குப்பைகள் சேகரிக்கப்பட்டு வருகிறது. எல்லா தெருக்களிலும் திறந்த வெளி வாறுகால்கள் கட்டப்பட்டுள்ளன. நகரில் பல பகுதிகளில் உள்ள பெரிய வாறுகால்களுக்கு நகரில் வெளிப்புறத்தில் உள்ள பெரிய ஓடையுடன் சேர்த்து விடப்படுகிறது.

## திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 :

திடக்கழிவுகளை சிறப்பாக மேலாண்மைப்படுத்த கீழ்க்கண்டவாறு செயல்திட்ட முன்வடிவம் தயாரிக்கப்பட்டுள்ளது.

## திடக்கழிவுகளை ஆரம்ப நிலையில் பிரித்தல்:

நகராட்சி பகுதியில் சுமார் 25,185 குடியிருப்புகள் உள்ளன. அனைத்து குடியிருப்புகளிலிருந்து வெளியேறும் சுமார் 35 மெட்ரிக் டன் திடக்கழிவுகளில் மக்கும் தன்மை மற்றும் மறு சுழற்சி செய்யக் கூடியவைகளை தனித்தனியாக பச்சை மற்றும் சிவப்பு நிற பிளாஸ்டிக் டிரம்களில் துப்புரவு பணியாளர் வீடு வீடாகச் சென்று மணியடித்து சேகரித்து வாங்கும் வகையில் 250 வீடுகளுக்கு ஒரு துப்புரவு பணியாளர் என்ற விகிதத்தில் அனைத்து வீடுகளுக்கும் தனித்தனியாக பட்டியல் தயாரித்து ஒவ்வொரு துப்புரவு பணியாளர்களுக்கும்

பச்சை மற்றும் சிவப்பு நிற டிரம்களுடன் கூடிய எளிதான வகையில் கையாளுவதற்கு ஏற்ற வகையில் 100 எண்ணம் கையினால் தள்ளும் வண்டிகள் வழங்கப்பட்டது.

## திருமண மண்டபங்கள் மற்றும் உணவகங்கள்:-

திருமண மண்டபங்கள் மற்றும் உணவகங்களிருந்து திடக்கழிவுகளை சேவைக் கட்டணம் பெற்று நகராட்சி மூலம் அகற்றப்பட்டு வருகிறது.

## திடக்கழிவுகள் செயலாக்கம்:–

நகரப்பகுதியிலுள்ள அனைத்து குடியிருப்புகளிலிருந்து சேகரிக்கப்படும் மக்கும் தன்மையுள்ள திடக்கழிவுகள் தற்போது உள்ள கலவை உரக்கிடங்கில் உள்ள பள்ளங்களில் போட்டு சுகாதாரமான முறையில் நிரப்பப்பட்டு வருகிறது. தற்போது நகர எல்லையில் இருந்து கிழக்கே 8 கி.மீ தூரத்தில் உள்ள சிதம்பராபுரம் கிராமம் சர்வே எண்.226/பாகம்–1, 226/2பாகம் மற்றும் 226/4ல் 16 ஏக்கர் நிலம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இந்த இடத்தில் விஞ்ஞான முறைப்படி திடக்கழிவு மேலாண்மையை செயல்படுத்தப்பட உள்ளது.

## துணை விதிகள் அமல்படுத்த நடவடிக்கை எடுத்தல்

இந்நகர்மன்றத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 இயற்றப்பட்ட துணை விதிகளை அமுல்படுத்துவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு மாவட்ட அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

## பேருந்து நிலையம் மற்றும் தினசரி சந்தையின் திடக்கழிவு மேலாண்மை:-

பேருந்து நிலையம் மற்றும் தினசரி சந்தையின் உள்ளே உள்ள அனைத்து வணிக வளாகங்களில் இருந்து வெளியேறும் கழிவுகளை மக்கும் தன்மை மற்றும் மறு சுழற்சி செய்யக்கூடிய குப்பைகளை தனித்தனியாக பச்சை மற்றும் சிவப்பு நிற கூடைகளில் சேகரித்து வைத்திருந்து நகராட்சி குப்பை லாரி வசம் ஒப்படைத்து வருகிறார்கள்.

பேருந்து நிலையத்தில் முக்கியமான இடங்களில் பச்சை மற்றும் சிவப்பு நிறத்தில் போதுமான அளவில் டிரம்கள் வைக்கப்பட்டுள்ளது. பேருந்து நிலைய வியாபாரிகளிடம் குப்பைகளை பச்சை மற்றும் சிவப்பு நிற கூடைகளில் தனித்தனியாக வைத்துள்ளார்களா என்று கண்காணிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## அச்சம் மற்றும் அருவருக்கத் தக்க வாணிபங்கள்:

நகரில் அச்ச மற்றும் அருவருக்கத்தக்க வாணிபங்களுக்கென தனிப்பட்ட இட வசதிகள் ஒன்றும் ஒதுக்கப்படவில்லை. ஆனால் சில இடங்களில் மட்டும் இன்னென்ன வாணிபங்கள் செய்யப்பட வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டது. அவ்வாறு உரிமம் வழங்கும் பொழுது போதுமான அளவு கட்டுப்பாடு விதிகள் அமுல் செய்யப்பட்டது. அறிக்கை ஆண்டில்

இந்த உரிமையாணைக் கட்டணங்கள் மூலம் ரூ. 5,30,383/—வந்துள்ளது. வியாபார அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளது. இம்மாதிரி உரிமங்கள் வழங்கப்பட்ட இடங்களில் துப்புரவு ஆய்வாளர்கள், துப்புரவு அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களும் அவ்வப்போது ஆய்வு செய்து அறிக்கை செய்து குறைபாடுகளை உடனுக்குடன் அவசியமான சட்ட விதிகளை அமுல் படுத்தி நிவர்த்தி செய்து வருகின்றனர்.

## காட்சிகளும், திருவிழாக்களும்:

அறிக்கை ஆண்டில் நகராட்சி எல்லையில் அங்கீகரிக்கப்பட்ட விழாக்கள் மற்றும் காட்சிகள் ஒன்றும் கிடையாது.

## பொது கேளிக்கைகள் சட்டம் :—

அறிக்கை ஆண்டில் இத்தலைப்பின் கீழ் வரவு ஏதுமில்லை.

## குடிநீர் விநியோகம்:—

### 1. பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம்

தமிழக அரசு தனது பொதுப்பணித் துறை இலாகாவின் 14.10.1970ம் தேதிய 2330 எண் ஆணையில் ரூ.108.45 லட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சியில் குடிநீர் விநியோக திட்டத்தை அனுமதித்துள்ளது. இந்நகரிலிருந்து 51 கி.மீ. தொலைவில் சீவலப்பேரி கிராமம் அருகில் தாமிரபரணி நதியிலிருந்து இந்நகரத்திற்கும், வழிப்புற கிராமங்கள் அனைத்திற்கும் மற்றும் சாத்தூர் நகராட்சிக்கும் இணைத்து குடிநீர் திட்டம் செயலாக்கப்பட்டது.

அனுமதிக்கப்பட்ட காலத்திற்குப் பின் செயலாக்கப்படும் காலத்தில் இடைவெளி கால அளவில் இத்திட்டத்திற்கான கருவிகள், தளவாடங்கள் இவற்றின் விலை ஏற்றத்தாலும் தொழிலாளர்கள் சம்பள உயர்வாலும் இத்திட்டம் 162.50 லட்சத்தில் திருத்தி அமைக்கப்பட்டு 21.07.1977 முடிய 152.78 லட்சம் தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தினரால் செலவு செய்யப்பட்டது. இத்திட்டம் முடிவு செய்யப்பட்டு வழிப்புற கிராமங்கள், பஞ்சாயத்துக்கள், இந்நகராட்சி பயன்படும் வகையில் பணிகள் முடிக்கப்பட்டது. 15.04.1976ம் தேதி குடிநீர் வழங்கப்பட்டது. தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரிய மேற்பார்வை பொறியாளர் 7003 வீட்டிணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் அரசு ஆணை நிலை எண்.97 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.12.07.2007ன்படி 1669 இணைப்புகளுக்கு வைப்புத் தொகை பெறப்பட்டு, 3455 இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இதில் நடப்பு ஆண்டில் 701 இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து தற்போது வரை 19812 வீட்டு இணைப்புகள் வழங்கப்பட்டு உள்ளது.

குடிநீர் உபயோகத்திற்குரிய குடிநீர் கட்டணத்தை குழாய் ஒன்றுக்கு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் ரூ.5/—வீதம் குறைந்த பட்ச மாதாந்திர கட்டணமாக ரூ.50/— பிரதி மாதம்

வசூலிக்கவும், குடியிருப்பு அல்லாத தொழிற்சாலை உபயோகத்திற்கு குழாய் ஒன்றுக்கு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் ரூ.10/—வீதம் குறைந்த பட்ச மாதாந்திர கட்டணமாக ரூ.100/— பிரதிமாதம் வசூலிக்கவும் மற்றும் குடியிருப்பு உபயோகம் அல்லாத வாணிப உபயோகத்திற்கு குழாய் ஒன்றுக்கு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் ரூ.10/— வீதம் குறைந்த பட்ச மாதாந்திர கட்டணமாக ரூ.100/— பிரதி மாதம் வசூலிக்கவும் குடிநீர் விநியோக உபவிதிகள் திருத்தம் செய்து வசூல் செய்ய புதிய குடிநீர் திட்டம் செயலாகத்திற்கு வந்தவுடன் நடைமுறைப்படுத்த மன்றம் ஒப்புதல் அளித்துள்ளது. மேலும், அளவு மானிய பராமரிப்பு கட்டணமாக மாதம் ஒன்றுக்கு ரூ.1/— வீதம் வசூலிக்கப்பட்டு வருகிறது.

கோவில்பட்டி கூட்டு குடிநீர் திட்டத்தில் தலைமை நீரேற்று நிலையம் மற்றும் வழிப்புற நீர்உந்து நிலையங்களில் உள்ள மின் மோட்டார்களை மாற்றவும் கூடுதலாக ஒரு மேல்நிலை நீர்தேக்க தொட்டி குடிநீர் விநியோகம் செய்யவும் அரசாணை எண். 71 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.24.03.1995ன்படி 132.80லட்சம் கடன் தொகை அனுமதிக்கப்பட்டு முதல் கட்டமாக கதிரேசன்கோவில் மலை அடிவாரத்தில் மேல்நிலை நீர்த் தேக்க தொட்டி கட்டும் வேலை தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு முடிவுற்றது. மேற்படி திட்ட வேலைகளுக்கு தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்திற்கு ரூ.97.15 லட்சம் 12.01.1996ல் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

வீரவாஞ்சிநகர் பகுதியில் நிரந்தர அடிப்படையில் குடிநீர் வசதி செய்வதற்காக 5.00 லட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டும் பணி தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் மூலம் ரூ. 132.80 இலட்சம் செலவில் செய்து முடிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

காந்திநகர் பகுதியில் குடிநீர் வசதி செய்வதற்காக 1.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ரூ.7.70 லட்சம் செலவில் செய்து முடிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

சுப்பிரமணியபுரம் பகுதியில் குடிநீர் வசதி செய்வதற்காக 1.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க பணி ரூ.7.70 லட்சம் செலவில் செய்து முடிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

ஊரணி தெருவில் குடிநீர் வசதி செய்வதற்காக 1.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த் தேக்க பணி ரூ. 7.70 லட்சம் செலவில் செய்து முடிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**அடி குழாய்கள்:—**

மொத்தம் 453 எண்ணங்கள் உள்ளன. அதனில் 405 எண்ணங்கள் நல்ல நிலையில் இயங்கி வருகிறது.

## <u>கோவில்பட்டி நகராட்சி குடிநீர் மேம்பாட்டு திட்டம்:-</u>

கோவில்பட்டி நகராட்சியில் 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 95057 ஆக உள்ளது. தற்போது கோவில்பட்டி நகராட்சி பகுதிகளுக்கு நாள் ஒன்றுக்கு 55 இலட்சம் லிட்டர் மட்டுமே குடிநீர் கிடைக்கப்பெற்று தினசரி குறியீடான 90 இலட்சத்திற்கு குறைவாகவே விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதன் காரணமாக கோவில்பட்டி நகராட்சியில் 5 தினங்களுக்கு ஒரு நாள் மட்டுமே தண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், ஏற்கனவே பதிக்கப்பட்டுள்ள குடிநீர் விநியோகம் மற்றும் பகிர்மான குழாய்கள் பதிக்கப்பட்டு 33 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் அவ்வப்பொழுது குழாய்களில் உடைப்பு ஏற்பட்டு குடிநீர் வீணாகி விநியோகம் பாதிப்படைகிறது. ஆகவே, கோவில்பட்டி நகராட்சிக்கு தனியாக புதிய குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் வழங்கக்கோரி பொதுமக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளால் கோரிக்கை அளிக்கப்பட்டது. அதனடிப்படையில் கோவில்பட்டி நகராட்சியில் குடிநீர் விநியோகத்தை சீராக வழங்கும்பொருட்டு புதிய குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு அரசு அனுமதி அளித்திட நகர்மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

அதன்படி புதிய குடிநீர் விநியோக அபிவிருத்தித் திட்டம் (UIDSSMT) திட்டத்தின் கீழ் ரூ.81.82 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேற்கொள்ள அரசாணை எண்.88, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 28.03.2012ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, **தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்** மூலம் இப்பணிக்கு 29.08.2012ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் முடிவு செய்யப்பட்டு M/s.சாய்சுதிர் உள் கட்டமைப்பு நிறுவனம், ஐதராபாத்–க்கு 27.12.2012ல் பணி உத்திரவு வழங்கப்பட்டது. நகராட்சியில் இருந்து பணிகள் விரைவுபடுத்தவும், சாலை பராமரிப்பு கட்டணம் செலுத்தவும் ரூ.90.00 இலட்சம் முதல் தவணையாக விடுவிக்கப்பட்டு பணிகள் விரைவில் துவங்கப்பட உள்ளது.

## <u>மேயர்ஸ் மின்சார மோட்டார்கள் இணைந்த – குழாய் கிணறுகள்:–</u>

மொத்தம் 225 எண்ணங்கள் உள்ளன. அவைகளில் 200 எண்ணம் நல்ல நிலையில் இயங்கி வருகிறது. இது தவிர அரசு ஆயுள் காப்பீட்டு கழகத்திடம் பெற்ற கடன் தொகைகளுக்கு அறிக்கை ஆண்டில் அரசுக்கு ஏதும் செலுத்தப்படவில்லை. அரசு அனுமதித்தபடி வழிப்புற கிராமங்கள், பஞ்சாயத்துக்கள், செலுத்த வேண்டிய குடிநீர் கட்டணம் ரூ.92.36 லட்சம் நிலுவையில் உள்ளது. தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தின் மூலம் பராமரிக்கப்பட்டு வரும் 4 நீர் உந்து நிலையங்களுக்கு மின்கட்டணம் மாதந்தோறும் செலுத்தப்பட்டு வருகிறது.

## கழிவு நீர் போக்கு:

இந்நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் இல்லை. நகரில் தேவையான எல்லா தெருக்களில் திறந்த வெளி வாறுகால்கள் வெட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. எல்லா வாறுகால்களிலும் உள்ள கழிவு நீர்கள் ஒன்று சேர்ந்து நகரின் வழியாக செல்லும் பிரதான ஓடை மூலம் பாசனக் கால்வாயில் ஒன்று சேர்கிறது. அறிக்கை ஆண்டில் புதிய திறந்தவெளி வாறுகால்கள் 1.75 கி.மீ நீளம் கட்டப்பட்டுள்ளது. நகரிலுள்ள வெளி வாறுகால்களை சுத்தம் செய்ய நியமிக்கப்பட்ட சிப்பந்திகள் தொடர்ந்து பணியாற்றி வருகிறார்கள்.

## பாதுகாப்பு:

இந்நகரில் தீயணைப்பு படைப்பிரிவு 18.01.1974ம் தேதி முதல் ஏற்படுத்தப்பட்டு மெயின்ரோடு இராமசாமிதாஸ் பூங்காவில் நிறுவப்பட்டு இயங்கி வருகிறது. இப்பிரிவில் தீயணைப்பு நிலைய அதிகாரி ஒருவரும், 32 பணியாளர்களும் பணிபுரிந்து வருகிறார்கள். இந்நகரில் பெருமளவு தீப்பெட்டி தொழிற்சாலைகளும், அதற்கு வேண்டிய உபகரண தொழிற்சாலைகளும், இரண்டு பெரிய நூற்பு மற்றும் நெசவு ஆலைகளும் இருக்கிறது. மேற்படி நூற்பாலைகள் மற்றும் நெசவு ஆலைகளில் சுமார் 1400 பணியாளர்கள் வேலை செய்து வருகிறார்கள்.

## பொது:

அறிக்கை ஆண்டில் இந்நகராட்சியில் கீழ்க்கண்ட இனங்கள் பயன்தரும் இனங்களாக இருந்து வந்தது.

1. தினசரி சந்தை மற்றும் தினசரி சந்தை கடைகள்
2. வாரச் சந்தை
3. அறிஞர் அண்ணா பேருந்து நிலையம் நுழைவுக் கட்டணம் பேரூந்து நிலைய நுழைவு கட்டணம் வசூல்
4. அறிஞர் அண்ணா பேருந்து நிலையம் கடைகள் மற்றும் பூ, முறுக்கு, கொய்யாப்பழம் பேருந்து நிலையம் கடைகள் மற்றும் பூ, முறுக்கு, கொய்யாப்பழம் விற்பவரிடம் கட்டணம் வசூல்
5. ஆடறுப்பு மனை
6. நவீன கட்டண கழிப்பிடம்
7. குடியிருப்பு வீடுகள்
8. சொக்கன் ஊரணி கடைகள்
9. புதுக்கிராமம் கடைகள்
10. நகராட்சி தங்கும் விடுதி
11. ராமசாமிதாஸ் பூங்கா வளாக கடைகள்
12. புதுரோடு கடைகள்

## குடியிருப்பு வீடுகள்:

இந்நகராட்சிக்கு பாத்தியப்பட்ட நான்கு குடியிருப்பு வீடுகள் உள்ளன. இதில் ஒன்றில் ஆணையாளருக்கும், மற்றொன்றில் பொறியாளருக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் உள்ள இரண்டு குடியிருப்பு வீடுகளில் இளநிலை பொறியாளர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. ஒருங்கிணைந்த நகர அபிவிருத்தி திட்டத்தின் கீழ் துப்புரவு பணியாளர்களுக்கு 30 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. அதில் துப்புரவு பணியாளர்கள் குடியிருந்து வருகிறார்கள். இதன் மூலம் கிடைக்கும் வருட வாடகை முதலியவற்றிலிருந்து கிடைக்கும் வருமானங்களே இத்தலைப்பின் கீழ் கிடைக்கும் பிரதான வருமானங்களாகும்.

## போக்குவரத்து:—

போக்குவரத்து நடத்துபவர்கள் அரசைச் சார்ந்த கழகங்களாகவும் தனியார் துறையினராலும் நடத்தப்பட்டு வருகிறது. இந்நகருக்கும், நகரை சுற்றியுள்ள கிராமங்களுக்கும் முறையாக பேருந்து வண்டிகள் மூலம் தொடர்பு கொள்ள பேருந்து வண்டிகளில் உரிமையாணை வழங்குவது, தொடர்ந்து அரசினாலேயே செய்யப்பட்டு வருகிறது. கிட்டத்தட்ட 650 பேரூந்துகள் இந்நகராட்சி பேரூந்து நிலையத்திற்கு வந்து செல்கிறது.

# கோவில்பட்டி நகராட்சி

**11)** வரியற்ற இனங்களின் கீழ் உள்ள குத்தகை இனங்களுக்கு 2018–2019ஆம் ஆண்டுக்கான குத்தகை மற்றும் மாத வாடகை கடைகள் மூலம் வரப்பெறும் வருமானம்

| இனங்கள் | 2018.2019 குத்தகை தொகை ரூ. |
|---|---|
| 1. கூடுதல் பேருந்து நிலையத்தில் கட்டணக் கழிப்பிடக் கட்டணம் வசூல் செய்தல். | |
| 2. அறிஞர் அ.ண்ணா பேருந்து நிலையத்தில் கட்டணக் கழிப்பிடம் கட்டண வசூல் | |
| 3. நகராட்சி எல்லைக்குட்பட்ட பலன்தரும் மரங்கள் | |
| 4. அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சி பெட்டி வைத்து விளம்பரம் | |
| 5. தினசரி சந்தையில் கட்டண கழிப்பிடம் | |
| 6. அண்ணா பேருந்து நிலையத்தில் பொருட்கள் காப்பகம் | |
| 7. அண்ணா பேருந்து நிலையத்தில் கட்டணக் கழிப்பிடம் வசூல் | |
| 8. நகராட்சி ஆடறுப்பு மனையில் கட்டணம் வசூல் | **403.39/–** |
| 9. அண்ணா பேருந்து நிலையத்தில் தலைச்சுமையாக விற்பனை செய்யும் வசூல். | |
| 10. கூடுதல் பேருந்து நிலையத்தில் பேருந்துகள் நுழைவுக் கட்டணம் | |
| 11. அண்ணா பேருந்து நிலையத்தில் பேருந்து நுழைவு கட்டணம் வசூல். | |
| 12. நகராட்சி வார சந்தையில் கட்டண வசூல் | |
| 13. நகராட்சி தினசரி சந்தையில் நுழைவு கட்டணம் வசூல் | |
| 14. நகராட்சிக்கு சொந்தமான மாதவாடகை கடைகள் மூலம் வரும் மாதவாடகை தொகையும் சேர்த்து | |
| **மொத்தம்** | |

## சந்தைகள், பேருந்து நிலையங்கள் மற்றும் ஆடறுக்கும் மனை முதலியவை

சந்தைகள், அறிஞர் அண்ணா பேருந்து நிலையங்கள் மற்றும் ஆடறுக்கும் மனை, பலன் தரும் மரங்களின் பலனை அனுபவிக்கும் உரிமம், நவீன கட்டணம் நகரில் வாழும் பன்றிகளின் உரங்களை சேகரிக்கும் உரிமம், நகரட்சிக்கு பாத்தியப்பட்ட காலி இடங்களில் தற்காலிக கடைகள் வைத்து வியாபாரம் செய்து அனுபவித்து வரும் உரிமம் ஆகியவற்றிலிருந்து இந்நகராட்சிக்கு கடந்த மூன்று வருடங்களில் கிடைக்கப் பெற்ற வருமானம் மூலம் வரவான தொகைகள் விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | வரவின இனங்கள் | 2018–2019 |
|---|---|---|
| 1 | தினசரி சந்தை | 403.39/– |
| 2 | தினசரி சந்தை மற்றும் இதர கட்டிடங்களின் கடைகள் வாடகை | |
| 3 | அறிஞர் அண்ணா பேருந்து நிலையங்கள் பஸ் நுழைவுக் கட்டணம் வசூல் | |
| 4 | அறிஞர் அண்ணா பேருந்து நிலையங்கள் மேற்கு பகுதி,கிழக்கு பகுதி தரைதளம் மற்றும் முதல்தளம் கடைகள் | |
| 5 | இருசக்கர வாகன நிலையங்கள் | |
| 6 | ஆடு அடிக்கும் தொட்டி | |
| 7 | தினசரி சந்தையில் வாகனம் நுழைவுக் கட்டணம் | |
| 8 | அறிஞர் அண்ணா பேருந்து நிலையம் பூ, முறுக்கு, வெள்ளரிக்காய், கொய்யாப்பழம், இஞ்சி முரப்பா விற்பனை உரிமம் | |
| 9 | நவீன கழிப்பிடம் மற்றும் குளியலறை (5) | |
| 10 | கூடுதல் பேருந்து நிலையம் பூ, முறுக்கு, வெள்ளரிக்காய், கொய்யாப்பழம், இஞ்சி முரப்பா விற்பனை உரிமம் | |

### சந்தைகள்:–

இந்நகராட்சியில் தினசரி சந்தை ஒன்றும், வாரச்சந்தை ஒன்றும், பராமரிக்கப்பட்டு வருகிறது. நகராட்சி தினசரி சந்தையில் கடைகள் தினசரி கட்டணங்கள் மட்டும் வசூலிக்க ஒரு அலுவலக உதவியாளர் பயன்படுத்தப்பட்டு வருகிறார். தவிர ஒரு இரவு காவலர் உள்ளார். இத்தினசரி சந்தையில் நுழைவுக் கட்டண வசூல் உரிமம் வருடாந்திர குத்தகைக்கு விடப்பட்டது. தினசரிச் சந்தை நாள் வாடகை கடைகள் கட்டணம், வசூல் மூலம் அறிக்கை ஆண்டில் 403.39 லட்சம் தொகை வரவு வந்துள்ளது. கடைகளுக்கான மின்சார கட்டணத்தை அந்தந்த கடைக்காரர்களே செலுத்தி வருகின்றனர். சந்தை கடைகள் முதலியவற்றின் பராமரிப்பு செலவு மற்றும் சிப்பந்திகள் சம்பளம், படி முதலியன செலவிடப்பட்டது.

## வண்டி நிலையங்கள்:-

இந்நகராட்சியில் வண்டி நிலையங்கள் ஏதும்பராமரிக்கப்படவில்லை. இந்நகராட்சியில் தனியாருக்கு சொந்தமான வண்டி நிலையங்கள் இல்லை.

## பேருந்து நிலையங்கள்:

ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தன்கீழ் பொதுப்பணித் துறையினரால் அபிவிருத்தி வேலைகள் முடிவு பெற்று இந்த பேருந்து நிலையம் 07.04.1984 முதல் இயங்கி வருகிறது. மேலும், இந்த பேருந்து நிலையம் ''பி'' பிரிவு பேருந்து நிலையமாக மாவட்ட போக்குவரத்து அலுவலரால் வகைப்படுத்தப்பட்டு இந்நிலையத்திற்கு வரும் பேருந்துகளிடமிருந்து ரூ.12/– ஒரு நாள் ஒன்றுக்கு கட்டணமாக வசூலிக்கும் உரிமம் ஓர் ஆண்டுக்கு பொது ஏலத்தில் குத்தகைக்கு விடப்பட்டது. கடைகள் வியாபாரம் செய்யும் உரிமம் முதலில் மூன்று ஆண்டுகளுக்கு பொது ஏலத்தில் விடப்பட்டுள்ளது. அதை தொடர்ந்து அரசு ஆணையின்படி ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கும் வாடகை 15சதவீத்திற்கும் குறையாமல் உயர்த்தி சந்தை மதிப்பீட்டுப்படி வாடகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும் இந்நகருக்கு பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப கூடுதல் பேருந்து நிலையம் கட்டப்பட்டு 14.7.2007 முதல் மாவட்ட ஆட்சியாளரால் ஏ – வகுப்பு பேருந்து நிலையமாக அங்கீகரிக்கப்பட்டு ஒரு பேருந்துக்கு நுழைவு கட்டணம் ரூ.15/– வசூல் செய்யப்பட்டும் வருகிறது.

ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பேருந்து நிலையம் இரண்டாம் பாக வேலை முடிக்கப்பட்டு உபயோகத்தில் உள்ளது. அதில் உள்ள அனைத்து கடைகளும் ஏலம் விடப்பட்டுள்ளது. இதிலிருந்து நகர பேருந்துகள் அனைத்தும் செயல்பட்டு வருகிறது. இந்நகரிலிருந்து சுற்றியுள்ள கிராமங்களுக்கும் நகர பேருந்துகள் விடப்பட்டுள்ளது. இதில் கட்டணக் கழிப்பிடம் இரண்டு அமைந்துள்ளது.

## ஆடு அறுக்கும் மனை

இந்நகராட்சியில் எல்லா வசதிகளுடன் கூடிய ஆடு அறுக்கும் மனை ஒன்று பராமரிக்கப்பட்டு வருகிறது இந்நகரில் தனியாருக்கு சொந்தமான ஆடடிக்கும் மனை எதுவுமில்லை. பகுதி–2 திட்டத்தின் கீழ் 2007–08 ல் நவீன வசதிகளுடன் கூடிய ஆடடிக்கும் மனை ரூ.24.00 லட்சம் மதிப்பீட்டில் அனுமதிக்கப்பட்டு கட்டப்பட்டுள்ளது. அதன் மூலம் ஆண்டு வருமானம் ரூ.1.60/–லட்சம் ஆகும்.

## தொழிற்சாலைகளும், தொழில்களும்

இந்நகரில் இரண்டு பெரிய நூற்பு ஆலைகளும், அவியல் தொட்டிகளுடன் கூடிய 4 அரிசி அரவை ஆலைகளும் மற்றும் பல சாதாரண தொழிற்சாலைகளும், தீப்பெட்டி தயாரிக்கும் தொழிற்சாலைகளும் மற்றும் பருத்தி அரவை, எண்ணெய் தயாரிக்கும் இயந்திரம் இது போன்ற ஆலைகளும் உள்ளது. அனைத்து ஆலைகளும் நகராட்சி துப்புரவு ஆய்வாளர்களாலும், துப்புரவு அலுவலராலும் மற்றும் ஆணையாளராலும் அடிக்கடி பார்வையிடப்பட்டு அப்போதைக்கப்போது ஏற்படும் குறைகளை நிவர்த்தி செய்ய தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## மரம் நடுதல்:-

இந்நகராட்சியில் இராமசாமிதாஸ் பூங்கா மற்றும் இராஜாஜி பூங்கா ஆகிய இரண்டு பூங்காக்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது. சீதோஷ்ண நிலைக்குத் தக்கவாறும், தண்ணீர் வசதியைப் பொருத்தும், அறிக்கை ஆண்டில் நகரில் உள்ள பல இடங்களில் மரங்கள் நட்டப்பட்டுள்ளன.

## நிலம் மேம்படுத்துதல் மற்றும் நகரமைப்புத் திட்டம்:

நகரமைப்பு பிரிவில் கீழ்க்காணும் விபரப்படி பணியாளர்கள் பணியாற்றியுள்ளார்கள்.

| | | |
|---|---|---|
| 1. நகர்அமைப்பு அலுவலர் | – | 1 |
| 2. நகரமைப்பு ஆய்வாளர் | – | 2 |
| 3. இளநிலை உதவியாளர் | – | 1 |

## உள்ளூர் திட்டக் குழுமம்:-

கோவில்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதி உள்ளூர் திட்டக் குழும எல்லைகளாக அறிவிக்கப்பட்டுள்ளது. கோவில்பட்டி உள்ளூர் திட்டக் குழுமம் 08.04.1975ம் தேதிய ஊர் வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அரசாணை எண்கள் 650 மற்றும் 651ன்படி தனித்த உள்ளூர் திட்டக் குழுமமாக அமைக்கப்பட்டுள்ளது. 1971ம் வருடத்திய நகர் ஊரமைப்பு சட்டத்தின் கீழ் உள்ள திட்டப்பணிகளை உள்ளூர் திட்டக் குழுமம் கவனித்து வருகிறது. உள்ளூர் திட்டக் குழுமத்தின் ஒப்புதல் பெற்று திட்ட அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. அறிக்கை ஆண்டில் 59 பொருட்கள் முடிவு செய்யப்பட்டுள்ளது.

## முழுமைத் திட்டம்:—

கோவில்பட்டி உள்ளூர் திட்டப் பகுதிகளை உள்ளடக்கிய முழுமைத் திட்டத்திற்கு ஏற்கனவே 15.02.1991ம் தேதிய ஊர் வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் அரசாணை எண். 211ல் அங்கீகரித்து அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. மேலும், மேற்படி முழுமைத் திட்டத்தின் இடத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சிக்குத் தகுந்தாற்போல் மறு ஆய்வு செய்யப்பட்டு மறு ஆய்வு முழுமைத் திட்டம் அரசின் இணக்கம் பெற அரசிற்கு 8.03.2003ல் சமர்ப்பிக்கப்பட்டு அரசாணை எண்.145 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்:04.06.2004—ன்படி மறுசீராவிற்கு இணக்கம் அளிக்கப்பட்டுள்ளது. அதன் படி தமிழக அரசிதழில் பிரசுரம் செய்யப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. திட்ட அனுமதி வழங்கப்படும்பொழுது முழுமைத் திட்டத்தின் நிலம் மற்றும் கட்டிடம் உபயோகம் தொடர்பான விதிமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

## விரிவு அபிவிருத்தி திட்டங்கள்:—

இந்நகராட்சியின் விரிவு அபிவிருத்தி திட்டம் 1, 2, 3, 4, 5 மற்றும் 6 என மொத்தம் ஆறு அபிவிருத்தி திட்டங்கள் உள்ளன. அவற்றின் பரப்பளவு கீழ்க்கண்ட விபரப்படி உள்ளன.

| | |
|---|---|
| விரிவு அபிவிருத்தி திட்டம் எண். 1 | 185.40 ஏக்கர் |
| விரிவு அபிவிருத்தி திட்டம் எண். 2 | 128.84 ஏக்கர் |
| விரிவு அபிவிருத்தி திட்டம் எண். 3 | 141.44 ஏக்கர் |
| விரிவு அபிவிருத்தி திட்டம் எண். 4 | 190.22 ஏக்கர் |
| விரிவு அபிவிருத்தி திட்டம் எண். 5 | 287.06 ஏக்கர் |
| விரிவு அபிவிருத்தி திட்டம் எண். 6 | 235.88 ஏக்கர் |

விரிவு அபிவிருத்தி திட்டம்—I & II ஏற்கனவே நகர் ஊரமைப்பு துறையினரால், 20 வருடங்களுக்கு முன்னதாகவே இணக்கம் பெறப்பட்டு, காலாவதியாகி விட்டதால் மீண்டும் இடவளர்ச்சிக்கு ஏற்றவாறு மேற்படி இரு அபிவிருத்தி திட்டங்களுக்கும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், திருநெல்வேலி அலுவலகம் மூலம் சர்வே செய்யப்பட்டு வரைபட எண்.1 மற்றும் 2 தயார் செய்யப்பட்டு நில உரிமையாளர் கூட்டமும் நடத்தப்பட்டு (சம்பந்தப்பட்டவர்களின் ஆட்சேபணைகள் மற்றும் ஆலோசனைகளும் பெறப்பட்டு) மன்ற ஒப்புதலுடன் 1971—ம் வருடத்திய நகர்அமைப்பு அலுவலர் சட்டம் பிரிவு 25ன் கீழ் நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் இணக்கத்திற்காக அனுப்பப்பட்டதில் அதில் அபிவிருத்தி திட்டம் 1 மற்றும் 2—ற்கு இணக்கம் பெறப்பட்டுள்ளது. வரும் ஆண்டுகளில் ஒவ்வொரு விரிவு அபிவிருத்தி திட்டமும் இடவளர்ச்சிக்கு ஏற்றவாறு, நில அளவை செய்யப்பட்டு, வரைபடங்கள் இணக்கம் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

**<u>நில அளவைப் பணியாளர்களின் விபரம்</u>:-**

ஒரு நகர சார் ஆய்வாளரும், அவருக்கு துணையாக 1 சங்கிலியாளரும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் (தூத்துக்குடி மாவட்டம்) உத்தரவின்படி இந்நகராட்சியில் பணிபுரிந்து வருகிறார்கள். அவர்களுடைய ஊதிய, படி முதலியவற்றில் மூன்றில் இரண்டு பங்கு நகராட்சி நிதியிலிருந்து செலவழிக்கப்பட்டு வருகிறது.

## 2.<u>அளவு கடப்புகள்</u>:

நகராட்சி எல்லைக்குள் உள்ள தற்காலிக மற்றும் நிரந்தர ஆக்கிரமிப்புகள் அனைத்தும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுரையின்படி அகற்றப்பட்டு விட்டதால், மேற்படி நிரந்தர ஆக்கிரமிப்புக்கான கேட்பு மற்றும் நிலுவை முதலியன இந்நகர்மன்ற தீர்மான எண். 540 ன்படி 27–10–2005 ம் நாள் அன்று ரத்து செய்யப்பட்டுவிட்டது. அவ்வப்போது மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நடத்தப்படும் ஆக்கிரமிப்புகள் அகற்றுதல் தொடர்பாக. நடத்தப்படும் கூட்டங்களில் தெரிவிக்கப்படும் அறிவுரையின் பிரகாரம் அவ்வப்போது ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு வருகிறது.

**<u>அபிவிருத்தி திட்ட கட்டணம்</u>:-**

கோவில்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிக்கு அபிவிருத்தி தொகை வசூலிக்க அரசாணை எண். 919 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்.06.07.1985ல் அங்கீகரித்து அரசு உத்திரவு பிறப்பிக்கப்பட்டதின் பேரில் மேற்படி அபிவிருத்தி தொகை வசூலிக்க நடவடிக்கை எடுத்து மேற்படி தொகை 14.06.1989 முதல் வசூலிக்கப்பட்டு வருகிறது.

**<u>நகரமைப்பு நிதி கணக்கு</u>:**

நகரமைப்பு நிதி கணக்கு செலவு அறிக்கை ஆண்டில் இந்நகராட்சியில் ஐந்து வருடங்களில் விதிக்கப்பட்டு வந்த விகிதாச்சாரத்தின் வரிகள் தொடர்ந்து விதிக்கப்பட்டது.

**1.<u>சொத்துவரி</u>**

| | | |
|---|---|---|
| 1. பொது காரியங்களுக்காக | – | 35 சதவீதம் |
| 2. குடிநீர் மற்றும் வடிகால் வசதி | – | 41.4 சதவீதம் |
| 3. கல்வி வரி | – | 16 சதவீதம் |
| 4. துப்புரவு வரி | – | –– |
| 5.நூலக வரி | – | <u>7.6 சதவீதம்</u> |
| **மொத்தம்** | – | **<u>100 சதவீதம்</u>** |

## 2.காலிமனை வரி அரை வருட விகிதம்:

| | |
|---|---|
| 1. பொது காரியங்களுக்காக | நிலத்தின் விலை மதிப்பில் 1/4 சதவீனம் |
| 2. குடிநீர் மற்றும் சாக்கடை வரி | நிலத்தின் விலை மதிப்பில் 1/4 சதவீனம் |
| 3. விளக்கு வரி | 1/16 சதவீனம் |
| 4. துப்புரவு வரி | 1/16 சதவீனம் |
| 5. கல்வி வரி(வருட மதிப்பிடு) | 1/4 சதவீனம் |

## 3.விவசாய நிலையங்கள் மீது விதிக்கப்படும் வரி:–

விவசாய நிலங்கள் மீதான சொத்துவரி தமிழக அரசின் ஆணைப்படி நீக்கப்பட்டு வந்தது.

## 4.நூல் நிலைய வரி:

நூல் நிலைய வரியாக 2018–19 அறிக்கை ஆண்டில் ரூ.52.81/– லட்சம் வசூலிக்கப்பட்டது.

## 5.தொழில்வரி:

தொழில்வரி விதிப்பு சம்பந்தமாக திருத்தியமைக்கப்பட்ட தமிழக அரசு 1992ம் ஆண்டில் 24வது எண் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளதின் அடிப்படையில் 01.04.1992 முதல் பல்வேறு தொழில் நடத்துபவர்கள், வியாபாரம் மற்றும் வணிகத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் பல்வேறு நிறுவனம் வைத்து இருப்பவர்கள் அரசு சம்பளம் பெறும் ஊழியர்கள் மற்றும் நிறுவனங்களில் பணி செய்வோர் ஆகியவர்களுக்கு தொழில்வரி விதிப்பு செய்து வசூலிக்கப்பட்டு வருகிறது. அதன் மூலம் ஆண்டு வருமானம் ரூ. 74.85/–

## வண்டி வாகன வரிகள் மற்றும் கால்நடை வரி இனம்:-

1920ம் வருட நகராட்சிகளின் சட்டம் 4வது பிரிவு 20ன்படி வண்டி வாகனாதிகளுக்கும், கால்நடைகளுக்கும் அதிகபட்ச வரி விதிக்கப்பட்டது. இந்நகராட்சியில் இரண்டு சக்கர மிதி வண்டிகளுக்கு (சைக்கிள்) வரி கிடையாது. கழுதைகள், ஆடுகள் முதலியவைகளான கால்நடைகளுக்கு வரி விதிப்பிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. இதர வண்டிகளுக்கு –நகராட்சிகளின் சட்டம் 195 (1) பிரிவின்படி விதிக்கப்பட்டது.

| வ.எண் | தலைப்புகள் | தொகை ரூ. லட்சத்தில் |
|---|---|---|
| 1 | கேளிக்கை வரி | – |
| 2 | சொத்து விற்பனை மீதான மிகுவரி | 1456793 |
| 3 | நீதிமன்றத்தின் அபராதம் மூலம் மான்யம் | – |
| 4 | 13வது நிதிக்குழு பரிந்துரை மான்யம் | 205.91 |
| 5 | குடிசைப் பகுதியில் அபிவிருத்தி மானியம் | – |
| 6 | பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட மான்யம் | – |
| 7 | மாநில நிதிக்குழு மான்யம் SFC | 970.67 |

**கடன்கள்:–**

| கேட்பு | | | வசூல் | | | நிலுவை | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நிலுவை | நடப்பு | மொத்தம் | நிலுவை | நடப்பு | மொத்தம் | நிலுவை | நடப்பு | மொத்தம் |
| சொத்துவரி | | | | | | | | |
| 324.47 | 724.98 | 1049.45 | 73.11 | 349.66 | 422.77 | 251.36 | 375.32 | 626.68 |
| தொழில்வரி | | | | | | | | |
| 67.32 | 74.67 | 142.60 | 16.16 | 58.69 | 74.85 | 51.77 | 15.98 | 67.75 |

அரசு ஆணை (நிலை) எண்.149 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள். 9.11.2007 உத்திரவில் குடிநீர் திட்டத்திற்காக வாங்கப்பட்ட கடன் தொகை அரசால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

**வருவாய் நிதிக்கணக்கில் பொது நிலைமை:-**

வருவாய் நிதி கணக்கில் 2018–2019ம் ஆண்டில் முக்கிய இனங்களின் வரவு விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

1. கட்டிடங்கள், நிலங்கள் மீதான சொத்துவரி ரூ. 422.77 லட்சம்
2. தொழில்வரி ரூ. 74.85 லட்சம்

## வரி நபர் வீதம்:

அறிக்கை ஆண்டில் வசூலிக்கப்பட்ட வரியை நகரத்தில் உள்ள மொத்த மக்களின் எண்ணிக்கையால் வகுத்தால், வரி ஒரு நபருக்கு ரூ. 320/– கணக்காகிறது. சென்ற ஆண்டு இது ரூ.725/–ஆக இருந்தது. அறிக்கை ஆண்டில் 42301 கட்டிடங்களுக்கு வரி விதிக்கப்பட்டிருந்தது.

## 3.கேட்பு தண்டல் மற்றும் நிலுவை

அறிக்கை ஆண்டில் கேட்பு வசூல் மற்றும் நிலுவை பற்றிய விபரங்கள் கீழ்க்கண்டவாறு தரப்பட்டுள்ளது.

| கேட்பு | | | வசூல் | | | நிலுவை | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நிலுவை | நடப்பு | மொத்தம் | நிலுவை | நடப்பு | மொத்தம் | நிலுவை | நடப்பு | மொத்தம் |
| | | | | | | | | |
| 324.47 | 724.98 | 1049.45 | 73.11 | 349.66 | 422.77 | 251.36 | 375.32 | 626.68 |

இந்நகராட்சியில் வரிகள், உரிமையாணைக் கட்டணங்கள் அரசினர் மானியங்கள், உதவித் தொகைகள், வருவாய் தரும் இனங்கள் மூலம் வரும் வருமானம் இவைகள் பத்திரப்பதிவு செய்யும்போது கிடைக்கும் வருமானம் ஆகியவையே இந்நகராட்சிக்கு முக்கிய வருமானம் ஆகும். வசூலிக்கப்பட்ட தொகை இயல்பாக செலவுகளுக்கும், முதலீட்டு செலவுகளுக்கும் பயன்படுத்தப்பட்டது.

## 4. முதலீடு செய்தல்:

அறிக்கை ஆண்டில் ரூ. 1685819/– முதலீடு செய்யப்பட்டுள்ளது.

## 5. தணிக்கை:

அறிக்கை ஆண்டில் மொத்தம் 959 தணிக்கை தடைகள் நிலுவையாக இருந்தது. மேற்படி தணிக்கை தடைகளை நிவர்த்தி செய்ய விரைவு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## வழக்கு பதிவேடு:

சொத்துவரி சம்பந்தப்பட்ட வழக்குகளில் முந்திய ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் 4ல் நடைபெற்று வருகிறது. முந்தைய ஆண்டுகளில் தாக்கல் செய்யப்பட்டு நகராட்சிக்கு சாதகமாக முடிவு செய்யப்பட்ட வழக்குகளில் சம்பந்தப்பட்ட குத்தகையை அறிக்கை ஆண்டில் வசூலிக்க வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**1) <u>நகர்ப்புற கூலிவேலை வாய்ப்புத் திட்டம்:</u>**

நகர்புறகூலி வேலை வாய்ப்புத்திட்டத்தில் சாஸ்திரிநகர், திருமங்கைநகர் தெருக்களில் வடிகால் அமைக்கும் பணி செய்து முடிக்கப்பட்டது.

**2) <u>சமுதாய கட்டமைப்பு:</u>**

சமுதாய கட்டமைப்பு பிரிவிற்கு வரப்பெற்றுள்ள சுயஉதவி குழு உறுப்பினர்களுக்கு பதிவேடுகள் பராமரித்தல் பயிற்சி திடக்கழிவு மேலாண்மை பற்றிய விழிப்புணர்வு பிரச்சார நாடகம் மகளிர் தினவிழா, ஒருங்கிணைப்பு குழு கூட்டம், சிறுதொழில் பயிற்சி ஆகியவை வழங்கப்பட்டது.

## 1) மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதி உதவித் திட்டம்

மேற்படி திட்டத்தின் கீழ் மனு ஏதும் பெறப்படவில்லை.

## 2) டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு திட்டம்.

மேற்படி திட்டத்தின் கீழ் மானியம் ஏதும் அறிக்கை ஆண்டில் பெறப்படவில்லை. 2018–2019ம் ஆண்டில் வரப்பெற்ற முத்துலெட்சுமிரெட்டி மகப்பேறு உதவித்தொகை துணை இயக்குநர் சுகாதார பணிகள் அவர்களுக்கு பரிந்துரை செய்து பணம் வழங்கப்பட்டுள்ளது.

## 3)பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டம்:

மேற்படி திட்டம் ஊரக வளர்ச்சித் துறைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதால், மேற்படி திட்டத்தின் கீழ் மனு ஏதும் பெறப்படவில்லை. இத்திட்டத்தின் கீழ் நிதி உதவி வழங்கப்படவில்லை.

## 2018-19 Work Details

| Si no | Name of work | M book No | Est Amount in Lak | Expend in Lakh |
|---|---|---|---|---|
| | **General Fund** | | | |
| 1 | Arrangements of Noon meal center and providing baby toilet t park east (back side of amma unavagam) | 101/17-18 | 1.50 | 1.50 |
| 2 | Supply and fixing of gravel at AV School,mill school by using Jcb and Dozer (CM work) | 94/17-18 | 1.60 | 1.60 |
| 3 | Supply and fixing of refrigerator and table top grinder | 96/17-18 | 0.25 | 0.25 |
| 4 | Supply and filling of gravel at park west (CM work) | 89/17-18 | 0.60 | 0.60 |
| 5 | Borewell busstand mainroad toilet Near anandha Lodge | 91/17-18 | 1.50 | 1.50 |
| 6 | repair and maintenance culvert and Storm water drain at Subramaniapuramr in ward no.36 | 68/17-18 | 1.10 | 1.10 |
| 7 | BT Patch work AKS theater Road,Busstand Entrance | 93/17-18 | 3.60 | 3.60 |
| 8 | repair and maintenance of Urban health center in oorani street | 63/17-18 | 1.50 | 1.50 |
| 9 | Supply and delivery of Lighting Materials | 69/17-18 | 0.60 | 0.60 |
| 10 | Provision of Electrical arrangements and replacement of single phase to 3phase connection to mini power pump room at stalin colony | 70/17-18 | 0.12 | 0.12 |
| 11 | Natural Calanities -Heat waves | 77/17-18 | 0.70 | 0.70 |
| 12 | 2000Lit sintex tank bhagathsingh street | 92/17-18 | 0.50 | 0.50 |
| 13 | Cable line laying borewell motor erection at ramasamy dass park back side | 75/17-18 | 0.65 | 0.65 |
| 14 | vermi compost tub at new busstand | 32/18-19 | 0.90 | 0.90 |
| 15 | Fencing for park site ram hanuman nagar | 31/18-19 | 1.65 | 1.65 |
| 16 | repair and maintenance of slaughter house in oorani street | 44/18-19 | 1.20 | 1.20 |
| 17 | repair and maintenance culvert and Storm water drain at kadhiresann kovil road in ward no.26 | 38/18-19 | 1.35 | 1.35 |

| | | | | |
|---|---|---|---|---|
| 18 | fencing venkatesh nagar park | 33/18-19<br>34/18-19 | 1.80 | 1.80 |
| 19 | Repair and maintanence of Culvert at vakkil street | 35/18-19 | 0.41 | 0.41 |
| 20 | repair and maintenance culvert and Storm water drain at Sasthiri nagar in ward no.31 | 36/18-19 | 0.45 | 0.45 |
| 21 | Providinf and Laying of Shed and incinerator at bharathi nagar school In ward no.31 | 48/18-19 | 2.40 | 2.40 |
| 22 | repair and maintenance and Storm water drain at annan street in ward no.29 | 41/18-19 | 0.50 | 0.50 |
| 23 | Supply and delivery of sintex tank at AV school ,Laying of samiyana panthal and tarpaulin,lighting arrangements at vehicle parking area (CM work) | 28/18-19 | 0.95 | 0.95 |
| 24 | Busbay shed anna Busstand east side | 40/18-19 | 3.20 | 3.20 |
| 25 | Dismantling of Existing Maternity center Building providing walkway Paltform in Park area at anna nagar(sri ram nagar) | 50/18-19 | 4.50 | 4.50 |
| 26 | Supply and fixing of switch boxes at various places in municipal limit | 39/18-19 | 0.60 | 0.60 |
| 27 | Repair and maintanence of Culvert at vakkil street | 30/18-19 | 2.50 | 2.50 |
| 28 | repair and maintenance culvert and Storm water drain at kadhiresann kovil road 1st street in ward no.26 | 28/18-19 | 0.60 | 0.60 |
| 29 | Onsite micro compost center ramasamy dass park,thirumangai nagar park,rajaji park | 46/18-19 | 3.00 | 3.00 |
| 30 | Conversion community toilet at subramaniapuram ward no 36 | 43/18-19 | 0.70 | 0.70 |
| 31 | Onsite micro compost center venkatesh nagar park,sri ram nagar park,jothi nagar(kamaraj avenue)park | 54/18-19 | 3.00 | 3.00 |
| 32 | urinal ulavar santhai, mathangkovil street | 53/18-19 | 1.40 | 1.40 |
| 33 | Dismantling toilet at muthanandhapuram | 82/18-19 | 0.20 | 0.20 |
| 34 | | 83/18-19 | | |
| 35 | | 52/18-19 | | |
| 36 | | 42/18-19 | | |
| 37 | Compound wall aringar anna street | 97/18-19 | 0.40 | 0.40 |
| 38 | culvert at subramaniapuram 4th street in ward no.36 | 100/18-19 | 0.30 | 0.30 |
| 39 | 3HP Submersible motor ward no.26 near OHT | 84/18-19 | 0.38 | 0.38 |
| 40 | Retaining wall Manthithoppu Road | 86/18-19 | 1.10 | 1.10 |
| 41 | Repair and maintenance of motor room at venktesh nagar ward no.28 | 88/2018-19 | 0.31 | 0.31 |
| 42 | Supply and fiixng if 3'' CI Sluice valve at aringar anna street and park OHT and supply and fixing of submersible motor cable borewell at vv nagar | 85/18-19 | 0.80 | 0.80 |

| | | | | |
|---|---|---|---|---|
| 43 | Construction of Storm water drain at veeravanchi nagar 1st cross street in ward no.26 | 89/2018-19 | 2.60 | 2.60 |
| 44 | Repair and maintanence of SWD at vakkil cross street in ward no.32 | 91/2018-19 | 0.97 | 0.97 |
| 45 | Rectification of damaged distribution line during highways road works at main roa (near lakshmi mill Busstop) | 93/18-19 | 0.31 | 0.31 |
| 46 | Anganvadi Near amma unavagam back side additional work | 87/18-19 | 0.50 | 0.50 |
| 47 | Repair and maintanence of SWD at kathiresankovil road near thevar school | 99/18-19 | | |
| 48 | Sluice valve brass spindle | 94/18-19 | | |
| 49 | Dismantling anganvadi park east street | 90/18-19 | 0.11 | 0.11 |
| 50 | Busstand toilet | 92/18-19 | 0.40 | 0.40 |
| | | | | |
| | **MLA Fund** | | | |
| 1 | Erection of borewell with motor arrangements with syntex tank at bharathi nagar municipal school in ward no.31 | 132/18-19 | 2.00 | 2.00 |
| 2 | Erection of borewell with motor arrangements and construction of motor room with syntex tank in ward no.29 | 55/18-19 | 3.00 | 3.00 |
| 3 | 5000Lit sintex tank and pipe line veeravanchi nagar | 47/18-19 | 1.87 | 1.87 |
| 4 | Borewell with motor arrangements Subramaniapuram in ward no-36 | 45/18-19 | 3.00 | 3.00 |
| | | | | |
| | | | | |
| | **SBM** | | | |
| 1 | Veeravanchi Nagar MCC | 108/17-18 | 44.00 | 44.00 |
| 2 | New Busstand MCC | 107/17-18 | 54.50 | 54.50 |
| 3 | Amma unavagam MCC | 106/17-18,109/17-18 | 61.00 | 61.00 |
| 4 | Purchase of Light Commercial Vehicle | 96/18-19 | 50.67 | 50.67 |

## பொது:

அறிக்கை ஆண்டில் எல்கையில் யாதொரு மாறுதலும் இல்லை. இந்நகராட்சியின் சாலைகள் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டன.

இந்நகரில் தேவையான அளவுக்கு பாடசாலைகளும், நகரின் சாலைக்கு வெளியே ஒரு கல்லூரியும், பொறியியல் கல்லூரி இரண்டு பாலிடெக்னிக் ஒன்றும் பொது மக்களின் தேவையினை பூர்த்தி செய்யும் வகையில் சிறப்பாக தனி நபரால் இயக்கப்பட்டு வருகிறது. இந்நகரில் தேவையான அளவிற்கு மின் விளக்குகள், சோடியம் ஆவி மின் விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. இவை திருப்திகரமான நிலையில் உள்ளது. மேலும், நகரில் 4 X 24 வாட்ஸ் T5 324 எண்ணம் மற்றும் 70 வாட்ஸ் 23 சோடியம் ,ஆவி மின்விளக்குகள் முக்கியப் பகுதிகளில் போடப்பட்டு பொது மக்களின் நலனுக்கு அமைக்கப்பட்டுள்ளது. மேலும் பேருந்து நிலையம் முன்பு ஒரு உயர்மின் கோபுர விளக்கு அமைத்து பொது மக்களுக்கு பயன்படும் விதத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நகராட்சியின் நிதி நிலைமை பற்றாக் குறையாகத்தான் உள்ளது. பற்றாக் குறையை நேர் செய்ய வருவாய் தரும் அபிவிருத்தி திட்டங்களை நிறைவேற்ற துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

நகரின் மேம்பாட்டிற்காக, பல்வேறு திட்டங்களை அளித்து சிறப்பு செய்துள்ளார்கள். இவர்களுக்கு எனது அன்பார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

திருநெல்வேலி, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் ஆதரவு மற்றும் ஆலோசனைகளின் பேரிலும், பூரண ஒத்துழைப்பிலும் நிர்வாகம் நல்ல முறையில் நடந்தது. நிர்வாகத்தில் சக அதிகாரிகள், பணியாளர்கள், ஆகியோர்கள் அவர்களின் இடையே அன்பான தொடர்பும், நல்ல ஒத்துழைப்பும் இருந்து வந்தது. பொது மக்களும் நிர்வாகத்தை பாராட்டும் அளவிற்கு அமைந்தது.

ஆணையாளர்,
கோவில்பட்டி நகராட்சி.